நூலக
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 25 ஜ. ஆகி 15 இதழ் 26
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8–3–1985

# எட்டு மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் வெற்றி

புதுடில்லி மார்ச்.7

சட்டசபைத் தேர்தல்களில் மத்திய பிரதேசம், ஒரிஸா, குஜராத், ஹிமாச்சல் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி முக்கால் பங்கு பெரும்பான்மை பெற்றுள்ளது.

உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், பீகார் மகாராஷ்டிரம் மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளது. சிக்கிமில் சிக்கிம் சம்ராத் பரிஷித் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் ஜனதாக்கட்சியும் ஆந்திராப் பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சியும் அமோக வெற்றி பெற்றுள்ளன.

## பாண்டிச்சேரி

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அ. தி. மு. க இந்திராகாங்கிரஸ் கூட்டணி மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையினுல் வெற்றி பெற்றுள்ளது தெரிந்ததே.

இத் தேர்தலில்எல்லாமாநில முதலமைச்சர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.தேவி ரயில் சேவை கிளிநொச்சி வரை

(யாழ்ப்பாணம்)

**யாழ். தேவி ரயில் சேவை இன்றுமுதல் மீண்டும் கிளிநொச்சிவரை நடைபெறவுள்ளது. இச்சேவை நேற்றுப் பரீட்சார்த்தமாக கிளிநொச்சிவரை மேற்கொள்ளப்பட்டது.**

இச்சேவை இன்றுமுதல் தினமும் நடைபெறுமென்று யாழ். புகையிரத நிலைய அதிபர் திரு ஆர். அருட்சோதி தெரிவித்தார்.

யாழ் தேவி ரயிலில் ஆயுதப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்களென்றும் அவர்கூறினுர். பிரயாணிகள் மட்டுமே இந்த ரயிலில் பயணம்செய்வார்கள்.

கொழும்புக் கோட்டையிலிருந்து காலை 5-45 மணிக்கு புறப்படும் யாழ் தேவி ரயில் நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சி ரயில் நிலையத்தை எந்தடையுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு யாழ். தேவி ரயில் கொழும்புக்குப் புறப்படுமென்றும் அறிவிக்கப் பட்டது.

'இன்ரசிற்றி' ரயில் சேவை தற்போதைக்கு கிளிநொச்சி

[6ம் பக்கம் பார்க்க]

## எம். ஜி. ஆர் வாழ்த்து

(சென்னை)

யாநில சட்ட சபைகளுக்கான தேர்தலில் அமோக

(6 ம் பக்கம் பார்க்க)

# இலங்கை அகதிகள் தொகை 14,962

(சென்னை)

622 இலங்கைத் தமிழ் அகதிகள் 10 படகுகளில் நேற்றும் இராமேஸ்வரம் வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த மாதம் நாலாம் திகதியின் பின் இதுவரை இந்

(6-ம் பக்கம் பார்க்க)

# குருநகரிலிருந்து நேற்று வெளியேறிய குடும்பங்கள்

[யாழ்ப்பாணம்]

குருநகரிலிருந்து நேற்றும் சில குடும்பங்கள் அல்லைப்பிட்டி, சாட்டி ஆகிய இடங்களுக்குச் சென்றுள்ளன.

குருநகரிலிருந்து வெளியேற்றப்பட்ட இவர்களுக்குப் பண்ணையில் இடம் வழங்கப்பட்ட

(6ம் பக்கம் பார்க்க)

# வந்தாறுமூலை சம்பவம்: ரூபா 18 லட்சம் நஷ்டம்

(மட்டக்களப்பு)

வந்தாறுமூலையில் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் பாதிக்கப்பட்ட மக்களை, மட்டக்களப்பு அரச அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து நேற்றுச்சென்று பார்வையிட்டார்.

42 வீடுகள் முற்றுக எரிக்கப்பட்டும், 32 வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டுமுள்ளன, இவற்றின்பெறுமதி 18 லட்சம் என்று பொதுமக்களால் அரச அதிபருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் இருப்பிடங்களை விட்டு வெளியேறித் தங்களது உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளார்கள்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு லயன்ஸ், ரோட்டரிக்கழகங்கள் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதுடன், ஒவ்வொரு குடும்பத்துக்கும் நூறு ரூபாவுக்கு மேற்படாத நிவாரணப் பொருட்களை வழங்க சமூக சேவைகள் திணைக்களம் முன் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

# இருசடலங்கள்

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இனந்தெரியாத இரு சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுப் பிற்பகல் 5-30மணியளவில் (தணிக்கை) இரு சடலங்களும் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [மா]

# பவுண் சம்பந்தமான பொருட்களை ஏற்பதில்லை

## துர்க்கா தேவஸ்தானம் முடிவு

(ஏ. வி. மாணிக்கம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பவுண் சம்பந்தமான பொருட்கள் பக்தர்களிடமிருந்து மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்வதில்லை என்று துர்க்காபுரம் தேவஸ்தானம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த 4ம் திகதி இரவு அவ்வாலயத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நேற்று மேற்குறிப்பிட்ட முடிவு எடுக்கப்பட்டதாகத் தேவஸ்தான நிர்வாகசபை தெரிவித்தது.

ஆலயத்தில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற அடுத்த இரு தினங்களிலும் ஆலயத்திற்

[6ம் பக்கம பார்க்க]

# ஆங்கிலத் தினசரிக்கு எச்சரிக்கை

[கொழும்பு]

ராஜாங்க அமைச்சின் செயலாளரும், தகுதி வாய்ந்த அதிகாரியுமான திரு. ஐ. பி. குணதுங்கா தணிக்கை விதிகளை மீறி இரு செய்திகளைப் பிரசுரித்தத ஆங்கிலத் தினசரி ஒன்றை எச்சரித்துள்ளார்.

# "வங்கி எழுதுவினைஞர் பரீட்சை"

(கொழும்பு)

"வங்கி எழுது வினைஞர்கள் பரீட்சைக்கு என்ன நடந்தது" என்று கலவானை எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம நேற்றுப் பாரளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

# நீர்வேலியில் பசிக்கொடுமையால் இளைஞன் தற்கொலை!

[யாழ்ப்பாணம்]

பசிக்கொடுமையால் நீர்வேலியில் 22 வயது இளைஞர் ஒருவர் தற்கொலைசெய்து கொண்டார்.

நீர்வேலி, சிறுப்பிட்டியைச் சேர்ந்த நாகமணி தணிகாசலம் என்ற இளைஞரே தற்கொலை செய்தவராவர்.

(6-ம் பக்கம் பார்க்க)

# 'இனத் துரோகிகளை இனம் காண்போம்' விடுதலைப் புலிகள் துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

"இனத்துரோகிகளை இனம் காண்போம்" என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளினுல் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது,

அத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

"சகல வழிவகைகளிலும், தமிழீழ மக்களுக்கெதிராக சிறீலங்கா அரசானது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் சமூக பொருளாதார, கலாச்சார ரீதியிலான அடக்குமுறைகள் தொடர்ந்தும் விரிவடைந்தவாறே செல்கின்றன. தொடர்ச்சியான இனப்படுகொலையும் சொந்த மண்ணிலே எமது மக்கள் அகதிகளாக்கப்படுவதும் பொருளாதாரரீதியிலான தடைகள் ஏற்படுத்தப்படுவதும், இன்னும் சமுதாயத்திற்கு அத்தியாவ

[5ம் பக்கம் பார்க்க]

# கடலூர் படகு விபத்தில் 48 பேர் பலி!

(சென்னை)

கடலூர் துறைமுகத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட படகுவிபத்தில் இதுவரை 48 பேர் இறந்துள்ளதுடன், 25 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மாசிமகப் பண்டிகையை

(6-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு பிரயாணம்

(பேர்லீன்)

### கொழும்பு—பேர்லீன் சேவைகள்

உங்களின் உடனடியான பேர்லீன் பயணத்தைப் பாங்கொக் (BANKHOK) ஊடாக AEROFLOT சேவையில் ஒழுங்கு செய்துள்ளோம் என்பதை இத்துடன் மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ருேம்.

கட்டணம்:- ரூபா 15,500/-

புறப்படும் நாள்
AIR LANKA and AEROFLOT

திங்கள் கொழும்பு—பாங்கொக்—மொஸ்கோ—பேர்லீன்

நேரட். காலை 10-30 [a.m.] மாலை 6-00 [p.m.]
(நேரம் டிக்கட்டில் கூறப்படும்)

இவ்வொழுங்குகளை இம்மாதம் 11-ம் திகதி தொடக்கம் வரும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் எமது சேவையை நடைமுறையில் ஈடுபடுத்த உள்ளோம்.

விபரங்கட்கு:

முகாமையாளர்

கிறீன் பீல்ட் ட்ரவல் ஒப்பறேட்டர்ஸ்
Greenfield Travel Operators
26, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22784

(2145)

# விளம்பரம்

## விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினுல் கல் அரித்து தயாரிக்கப்படுபவை ..ர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

நல்ல நிலையிலுள்ள LD 27 ஸ்ரீ இலக்கமுள்ள வான் உடனடி விற்பனைக்குண்டு. விஜிகோ மரக்காலை, சட்டநாதர் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 2127

Recording Barக்கு தேவையான (Akai-Pioneer) Amplie-fier, Turntable, Audio Deck and Equalizer உபகரணங்களும், இதுவரை காலம் வெளிவந்த Records உம், மொத்தமாக—பகுதி பகுதியாக, விற்கப்படும். தேவைப்படுவோர் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2119, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2119

நாவலடி ஒழுங்கையில் சகல வசதியுடன் ஏறக்குறைய 3 பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: சு கந்தையா, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். 2158

மாவடிச் சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் வீடுகட்டுவதற்கு ஏற்ற 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கூடியவிலை கோருபவர்களுக்கு விற்கப்படும். திருமதி. இராமநாதன் மகேஸ்வரி, அமரர் வே. நாகலிங்கம் J.P.U.M., அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோவில் வீதி, வட்டுக்கோட்டை. 2153

4 படுக்கை அறைகளுடன் புதிய வீடு, மாபிள் நிலம் குளி அறை, குசினி தற்காலிக வசதிகளுடன் 187, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 22029. 2152

வாத்தியக் கருவிகள் பியானே (Piano) ஒன்று, பியானே எக்கோடியன் (60 Bass) ஒன்று, பியானே எக்கோடியன் (16 Bass) ஒன்று, கித்தார் (Guitar) ஒன்று சகலதும் மிக நல்ல நிலையில் உள்ளது விற்பனைக்குண்டு. A M. Brodie, Jaffna College Flats, Vaddukoddai. 2157

## விற்பனைக்கு

Sony Stereo அம்பிலிபயர் ரியூனர் றேடியோ, ரேப், டெக் மொடல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 15, சின்னக்கடைவீதி, அல்லது 17/1, பீச்ரூேட், குருநகர். 2142

வட்டுக்கோட்டையில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபார ஸ்தாபனம் போடுவதற்கு ஏற்ற 4 பரப்பு காணி ரூேட்டுக் கரையாக யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சித்தங்கேணிக்கும் இடையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: V. யோகலிங்கம், அருணுசலம் வித்தியாசாலை ஒழுங்கை, அளவெட்டிதெற்கு, அளவெட்டி. 2156

## தேவை

கவர்ச்சிகரமான பொருட்கள் விநியோகப்படுத்த அனுபவமும், தகமையுமுள்ள பிரதிநிதிகள் தேவை பிணைப்பணம் ரூ 3000/-த்துடன் நேரில் வரவும். சிறந்த ஊதியமும், உறைவிடமும் வழங்கப்படும். பெண்களும் விண்ணப்பிக்கலாம். சூசைதாசன் அன் சன்ஸ், 132, திருநகர், கிளிநொச்சி. 2155

## தவறிவிட்டது

05-03-85 அன்று தேசிய அடையாள அட்டை யாழ். பஸ் தரிப்பு நிலையத்திற்கும் குருநகர் இலங்கை வங்கிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பியோ அல்லது தெரிவிக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்ளுகிறேன். சன்மானம் வழங்கப்படும். திருமதி தங்கம்மா கந்தையா, சங்கானை மேற்கு, சித்தன்கேணி. 2160

### வரைவுள்ள நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம்
### வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

வெற்றுச் சாக்குத் தொகை:- 2775
விண்ணப்பப் படிவம்:- ரூபா 5/-
மீளளிப்பு வைப்புப் பணம்:- ரூபா 300/-
முடிவுத் திகதி:- 15-03-1985 நண்பகல் 1-00 மணி

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு'' எனக் குறிப்பிட்டு தலைவர், நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம், நெடுந்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஒப்பம்
இரா. தர்மலிங்கம்,
பொதுமுகாமையாளர்.
நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம், நெடுந்தீவு.
04-03-1985 2149

### சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்
### தாழ்மையான வேண்டுகோள்

எமது சங்கத்திஞல் ரூபா 5,50,000செலவுசெய்து கொள்வனவு செய்த புதிய இசுசு லொறி இல: 40 ஸ்ரீ 5071ஐ 5-2-85ல் இனந்தெரியாதவர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள். சங்கம் புதிதாக கொள்வனவு செய்த இந்த லொறியினுல் இதுவரை எதுவித உழைப்பும் உழைக்காத நிலையில் லொறி கடத்தப்பட்டுவிட்டது. ரூபா 5,50,000/- வங்கிக் கடனில் கொள்வனவு செய்த லொறிக் கடனைச் செலுத்தும்போது லொறியில்லாத நிலையில் சங்கத்துக்கு பாரிய நிதியிழப்பு ஏற்படுகிறது.

மேலும் எமது மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மக்களுக்கு நாம் தொடர்ந்தும் சேவைசெய்ய எமது லொறியைக் கடத்திச் சென்றவர்கள் பொதுமக்களின் நன்மைகருதி திரும்ப ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்ருேம்.

மேற்படி லொறி எங்காவது அனுதரவான நிலையில் நிற்பதைக் காணும் பொது மக்கள் எமக்கு அறிவக்குமாறு அன்புடன் வேண்டுகின்ருேம்.

சுன்னுகம்
பல நோ. கூ. சங்கம்.
05-03-85 2151

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

### A/L 86

சனி, ஞாயிறு வகுப்பு நடைபெறுகின்றது

8-00 பொதுஇரசாயனம்
9-00 வெப்பவியல்
10-00 ஆப்பு
11-30 நேர்கோடு
12-45 காவிகள்

CHE: செந்தில்
PHY: சிறீ
(யாழ். வளாகம்)

விபரங்கட்கு:
ஆசிரியர்:
Ravimohan
JAFFNA.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)
(2141)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### வள்ளுவர் வழியில் வையகம் வாழ்க



இன்று திருவள்ளுவர் குருபூசை

உள்நாட்டு மூலப் பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம் உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்.

250 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

பொன்னுத்துரை முத்துக்குமாரசாமி
(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்து சேவை சாரதி)

தோற்றம்:
1924-02-30

மறைவு:
1985-02-06




எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்களையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதில் நிலைத்திருக்கும் உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்ருேம்

மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

''இரத்தினகுமார் இல்லம்'',
2-ம் ஒழுங்கை,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. 2115

## 45-ம் நாள் நினைவஞ்சலி



திரு. நாகமணி தருமலிங்கம்
[பொலிஸ் சாஜன்ட்]

தோற்றம்: 12-03 1938 மறைவு: 23-01-1985

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், அறிவின் சுடராய், பாசத்தின் பிறப்பிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், சமூகத்தின் மத்தியில் நன்மதிப்புப் பெற்று, எம்மையெல்லாம் தாங்கமுடியாத துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென அணைந்துவிட்ட எங்கள் தெய்வமே!

நீங்கள் எம்மைவிட்டு பிரிந்தாலும், உங்கள் நினைவும், துயரும் எம்மைவிட்டுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

பாசமகள், உற்ருர், உறவினர், நண்பர்கள்.

பொலிஸ் நிலைய அருகாமை,
சுன்னுகம். 04-03-1985 2150

1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/5செB கபூர் பில்டிங
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

## மணி வாக்கு

பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணேமிக்க வேட்கை, அப்பொழுது இனிது போலத் தோன்றி, தான் பயன்கொடுக்கும் பொழுது தொலையாத துன்பத்தைக் கொடுக்கும்.

— வள்ளுவர்

# நமதுநோக்கு

## மாபெரும் பாதகம்

“விடுதலை யாருக்கு?” என்றவாறு கேள்விக் குறியுடன் யாழ்.நகர் சுவர்களில் சில நாட்களுக்கு முன் காணப்பட்ட விளம்பரங்கள் பற்றி எவரும் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. தனிப்பட்ட எவரோ தம் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்திருப்பதாகவே பலரும் எண்ணிக் கொண்டார்கள். ஆனால் அதே கேள்வியை பொறுப்புள்ளவர்கள் நாலும் அறிந்தவர்கள் பொதுமக்களும் கூட இன்று பகிரங்கமாகக் கேட்கும் படியான சம்பவங்கள் நிகழ்ந்து வருவது பெரிதும் கவலையளிப்பதாகும். பொறுப்பும் தகுதியுமுள்ளவர்கள் அனைவரும் இவ்வாறு கவலை தெரிவித்து விட்டு வாளாவிருந்துவிட முடியாது.

தமிழ்ப் பிரதேசங்களில் அடர்த்தியான பெரும்காடுகள் இல்லாது போனாலும் இது ஒரு பெரும் வேட்டைக்காடாக மாறியிருப்பது வெள்ளிடைமலை. அதேவேளை விசித்திரமான கொலைகளுக்கும், கொள்ளைகளுக்கும்கூட இந்நிலப்பகுதி பிரசித்திபெற்று வருகின்றது.

எதற்கும் ஒருவரை முறையுண்டு. அவ்வாறான வரை முறைகளைப் பின்பற்றுவதனாலேயே தமிழ்ச் சமூகம் தனது தனித்துவத்தைக் காத்துவந்துள்ளது. தனது கலை, கலாசாரம்— இவைகளோடு ஒட்டிய சமயம், சமயபீடங்களைப்பேணுவதும், வளர்ப்பதும் தமிழ்ச் சமூகத்தின் கடமை.

அறிவை வளர்க்கும் கல்விச்சாலைகளின் சாதனங்கள், பொதுமக்களின் அன்றாடத் தேவைகளுக்கு உபயோகமாகும் பொருட்கள், நோயாளிகளைப் பேணும் மருந்தகங்கள் — அவைகளின் தேவைக்கான வாகனங்கள் — என ஆரம்பித்து சைவமக்கள் தம் உயிர்போல் நேசிக்கும் கோயில்களிலும் கோயில் சொத்துக்களிலும் சிலர் கைவைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதன் உச்சமாக அமைந்ததே கடந்த 4ம் திகதி இரவு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடந்துள்ள பயங்கரக் கொள்ளை.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் வெறும் குடிசையாகக் காட்சி தந்துகொண்டிருந்த அவ்வாலயம், இன்று சைவமக்கள் போற்றி வளர்க்கும் திருத்தலமாகவும் தெய்வீகப் பேரொளி வீசும் புனித பூமியாகவும் மாறியிருக்கின்றது. எறும்புவளைக்குள் புல்லரிசி சேர்ப்பது போல் சிறுகச்சிறுகச்சேர்த்து உயர்ந்த கோபுரங்களும், சிறந்த கட்டிடங்களும் என்று புனித கைங்கரியங்களைச் செய்துவருகின்றனர் அவ்வாலய நிர்வாகிகள். அதன் பெருமையில் பெரும்பகுதியும் நிர்வாகசபைத் தலைவர் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையேசாரும்.

பொதுமக்களின் ஆதரவையே மூலதனமாகக் கொண்டு விளங்கும் இவ்வாலயம் இலைமறையாக இயற்றிவரும் அறப்பணிகள் அனந்தம்.

கடந்த பத்து வருடங்களுக்குள்ளேயே துர்க்காதேவி ஆலய வருமானம் அதிகரிக்கத் தொடங்கியது. ராஜகோபுரம் சித்திரத்தேர். தீர்த்தக்குளம், உள்வீதிச் சுற்றுமண்டபம முதலிய ஆலய திருப்பணிகள் நிறைவேறின.

ஆலயப்பணியோடு சமூகப்பணியையும் சபை செய்யத் தவறவில்லை. ஆதரவற்ற சிறுவர்களுக்கு உணவு, உடை, கல்வி, தங்குமிடம் கொடுத்திருக்கிறது ஏழு லட்சம் ரூபா செலவில் அநாதை இல்லம் கட்டப்பட்டுள்ளது. அவர்கள் விவசாயத்திலும் ஈடுபட மூன்றரை லட்சத்திற்குக் காணி வாங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சித்தாந்த பீடத்துக்கு உதவி இருக்கிறது. யாழ், ஆஸ்பத்திரிக்கு உதவியதுடன் தெல்லிப்பழை அரசாங்க வைத்தியசாலையின் மூன்றும் வார்ட்டின் சகல செலவையும் பொறுப்பேற்றுள்ளது. தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கும் உதவியதுடன் காலம் தோறும் அகதிகள் முகாம்களுக்கு உதவுகிறது.

இந்நிலையில் இளைஞர் கோஷ்டியொன்று இவ்வாலயத்துக்குள் நுழைந்து அறங்காவலர்களை அடாத மொழிகளால் அழைத்தும், திருப்பணி புரியும் குருக்கள்மாரை நிந்தித்தும், மூர்த்திகளின் திவ்விய ஆபரணங்களையும் ஆலயச் சொத்துக்களையும் அபகரித்தும் சென்றுள்ளது.

இது இந்நாட்டின் சைவ மக்களை மட்டுமல்ல சமய நம்பிக்கையுள்ள எல்லாரையுமே மனம்புழுங்கச் செய்துள்ளது.

சமய ஸ்தலங்களைக் களங்கப்படுத்துபவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழக்கவே செய்வார்கள். அந்த அளவுக்கு சமய உணர்ச்சியில் அவர்கள் ஊறிப்போய் இருக்கிறார்கள். சமயத்தின் பேரால் சிலசமயங்களில் நடைபெறும் சமூகத்துக்குதவாத சம்பவங்கள். ஆடம்பரச் செலவுகள், போலித்தனமான சம்பிரதாயங்கள், சுரண்டல்கள் போன்றவற்றை ஒழிப்பதென்று கூட சிலர் சிலபல காரியங்களில் ஈடுபடுவதை அறிகிறோம். அவைஇவ்வாறு மக்களின் அபரிமிதமான ஆதரவையும், மதிப்பையும் பெற்ற இடங்களில் செயல்பட முடியாத — அதுவும் கொள்ளை நடத்தப்படுவதென்றால் கொடுஞ் செயலாகவே கணிக்கப்படும்.

மேற்படி சம்பவத்துக்கு பொறுப்பாய் இருந்தவர்கள் யார் என்பது விரைவில் எவ்வாறாயினும் பொதுமக்களுக்கு அறியவரும் என்றே நம்புகின்றோம். அதற்கு முன்பே இதனையும் இதுபோன்றவற்றினையும் செய்தவர்கள் தம் தவறை உணர்ந்து எடுத்த பொருட்களை உரியவர்களிடம் மறைமுகமாகவேனும் திருப்பிக் கொடுத்துவிடுவது நல்லது. அதையே பொதுமக்களும் விரும்புவார்கள்.

வெள்ளிச் சிந்தனை

## திருநீறு தயாரித்தல்

பொற்றாமரை (மஞ்சள் நிறத்தாமரை) அன்னப்பறவை யாளி என்ற மிருகம் என்பன ஒருகாலத்தில் உலகில் இருந்த பொருட்களே. கால வெள்ளத்தால் விழுங்கப்பட்டு இன்று உலகில் இல்லாத பொருள்களாய் விட்டன. இவைபோலவே உண்மையான புனிதமான விபூதியும் நீண்ட காலமாக - சமீபகாலம் வரை சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய பொருளாயிருந்து இப்போ அபூர்வமான பொருளாய் விட்டது என்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

பொற்றாமரை முதலிய பொருட்கள் இல்லாமற் போனதற்கு காலமாற்றம் காரணம் என்றால் தூய உண்மையான திருநீறு கிடைக்காதநிலை வந்ததற்குச் சைவமக்களின் அசிரத்தையே காரணம் என்று சொல்ல வேண்டும்.

ஊறுகாய் - பனாட்டு- ஓடியல் மா முதலியவற்றை செய்து பேணிப் பயன்படுத்த இடையூறாக இக்காலத்தில் நம்சமூகத்தில் முளைத்தெழுந்த சோம்பலும்; திருநீற்றின் மகிமை, அதனால் ஏற்படும் பயன் என்பன பற்றிய அறியாமையுமே திருநீற்றுக்குப் பதிலாகக் கிடைக்கின்ற பலதரப்பட்ட பொடிகளில் மனநிறைவு கொள்ளும் சிறுமையை ஏற்படுத்தி விட்டன.

இன்றைய நிலையில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினைப்போல சைவ சமயத்தொடர்பான சங்கங்கள் நிறுவனங்களும் ஆலய நிர்வாகங்களும் தூயமுறையில் திருநீற்றைத் தயாரிக்கவும் விநியோகிக்கவும் முன்வர வேண்டும்

திருநீறு தயாரிப்பதற்குத் தேவையான பசுஞ்சாணம் முதலியன வாய்ப்பாகக்கிடைக்கும் காலம் இதுவேயாதலால் திருநீறு தயாரிப்பதில் ஊக்கத்துடன் செயற்பட வேண்டிய காலம் இதுவேயாகும். பெறுமதியும் பெரும்பயனும் உள்ள தங்கத்தை உடலுக்கு உகந்த மருந்தாக - “தங்கபஸ்மம்” ஆக வைத்தியம் வல்லோர் செய்வது போல் தூய்மைக்குக் காரணமான பசுஞ்சாணத்தை பஸ்மமாக்கி அணிவது சைவ சமயச்சின்னம் என்ற நிலைக்கு அப்பால் உடலுக்குப்பல உறுதிகளையும் வழங்கும்.

சகல தேவர்களும் பசுவின் அங்கங்களில் உறைவதால் பசுவிலிருந்து பெறப்படும் திருநீறு தெய்வீகமானது. வேதத்திலும் புராணங்களிலும் திருமுறைகளிலும் கூறப்பட்ட திருநீற்று மகிமையை ஒவ்வொருவரும் அறிந்து முறைப்படி திருநீற்றைத் தயாரித்து உபயோகிக்கும் வாய்ப்பு ஏற்படும் போது அதனால் கிடைக்கக் கூடிய பயனை முழுமையாக அடையமுடிவதோடு ஆலயங்களில் அளவுக்கு மிஞ்சிக் கொடுக்கும், அதை அலட்சியமாகக் கொட்டுகின்ற, ஊதிவிடுகின்ற அவலநிலையும் தானாகவே நீங்கும்.

கூறுகொண்டாய் மூன்று
மொன்றாய்க்
கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார்புர
மெரித்த மன்னவனே
கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீ
தென்று
எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களை
யாய்
நெடுங்களம் மேயவனே
— திருஞானசம்பந்தர்

— அருளாளன்

★ இன்று திருவள்ளுவர் குருபூசை

# தன்னிகர் இல்லாத் தண்டமிழ்ப்புலவன்

ம. பார்வதிநாதசிவம்

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்தார். திருக்குறளைத் தமிழ்மொழியில் ஆக்கினார். காலதேசங்களைக் கடந்த உண்மைகளைக்கூறிய காரணத்தால் உலகமகாகவி ஆனார்.

திருவள்ளுவர் அறத்தை விளக்கவே திருக்குறளைச் செய்தார். அந்தஅறம் இல்லகத்தும், துறவிடத்தும், நாட்டிலும் ஆட்சியிலும், அரசிலும் பொருளிலும் எங்கும் உருவும் நிழலுமெனப்பிரியா திருத்தலை விழைந்தார். இறைவனையே “அறவாழி அந்தணன்” என்று கூறுவதில் இன்பங்கண்டார்.

### திருக்குறளுக்கு அறம் என்றபெயர்

ஆலத்தூர்க்கிழார் என்னும் புலவரின் பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன அவர் தமது பாடலில் திருக்குறளைக் குறிப்பிடுகின்றார் அறம்பற்றிக் கூறிவந்த நூல் திருக்குறள் என்பதைக் கண்ட அவர் திருக்குறளுக்கு ‘அறம்’ என்று பெயர் கொடுக்கிறார் ‘ஒருவன் செய்திகொன்றோர்க்கு உய்திஇல்’ எனஅறம்பாடிற்றே என்கிறார்.

### இன்பமும் துன்பமும்

மனிதனாகப் பிறந்த எவனும் இன்பத்தையே நாடுகிறான். துன்பத்தை வெறுக்கிறான். ஆயினும் இன்பதுன்பங்கள் எப்படி வருகின்றன என்பதை ஆராய்கிறான் இல்லை. திருவள்ளுவர் அவனுக்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இன்பதுன்பங்கள் வரும்வழியை விளக்குகிறார் அறவழியில் வருவதே இன்பம் என்றார். அறவழியில் வராத எல்லாம் துன்பம் என்றார். உண்மை இன்பத்தை விரும்பும் மனிதன் தான்நிற்கும் நெறி அறநெறியா புறநெறியா என்று தெரிந்து கொள்ளவேண்டியவன் ஆகின்றான்.

### சுருக்கமாகச் சொல்லும் அழகு

ஒருவர் ஒருவரில் அன்பு என்பதை ஒருவரைக்கண்டு ஒருவர் காட்டும் முகமலர்வைக் கொண்டு கூறலாம். ஒருவர் கூறும் இன் மொழியைக் கொண்டு கூறலாம். ஒருவர் கொடுக்கும் கொடையைக் கொண்டு கூறலாம். ஒருவர் புரியும் உதவியைக் கொண்டு கூறலாம் இப்படிப் பலவற்றைச்சொல்லலாம். ஆனால் திருவள்ளுவர் மிகச் சுருக்கமாகப் “புன்கணீர்பூசல்தரும்” என்றார். தம்மால் அன்பு செய்யப்பட்டவரது துன்பத்தைக் கண்டபோது ஒருவருடைய கண்ணிலிருந்து பொழிகின்ற கண்ணீரே அன்பைக்காட்டும் என்றார் குழந்தையின் நோயைக்கண்டு கலங்கும் தாயின் கண்கள் தலைவனின் துயர் கேட்டுக் கலங்கும் தலைவியின் கண்கள் குடிமக்கள் துயர் கேட்டுக் கலங்கும் அரசனது கண்கள் அனைத்தும் அன்பின் உண்மையைக் கூறுபவையே.

### இலக்கிய நயம்

அறங்கூறும் நூல்கள் அனைத்தும் சிறந்த இலக்கியங்கள் ஆவதில்லை. ஆனால் திருக்குறளே அறநூலாகவும் அதே நேரத்தில் சிறந்த இலக்கியமாகவும் திகழ்கிறது.

தலைவன் சோலையில் உள்ள மலர்கள் பலவற்றையும் பார்க்கிறான். பார்க்கும்போது ஒவ்வொருமலரும் அவனுக்குத் தலைவியை நினைவுபடுத்தின. ஒவ்வோர் மலரும் தலைவியின் ஒவ்வோர் அங்கத்தை நினைவுபடுத்தின.

தாமரை, குவளை, நீலம் முதலிய மலர்கள் தலைவியின் கண்களை நினைவுபடுத்தின இவை தலைவியின் கண்களை நிகர்க்கும் என்று எண்ணினான். ஆனால் நன்கு ஆராய்ந்தபின் தாமரை குவளை நீலம் போன்ற மலர்கள் அழகால் தலைவியின் கண்களை ஒத்தாலும்கூட செயலால் கண்களுக்கு ஒப்பாகா என்று அறிந்தான். தலைவியின் கண்கள் அழகாக இருப்பதோடு அவை நோக்கும்போது ஆவலைத் தூண்டித்தலைவனுக்கு நோயை உண்டாக்குகின்றன. தலைவன் நோயினால் துடிக்கும்போது தலைவியின் கண்கள் நோக்கிலே அன்பைக்கலந்து மருந்தாகின்றன. நோயாகவும் மருந்தாகவும் இருக்கும் அதிசயம் தலைவியின் கண்களுக்கு உண்டு. இந்த அதிசயம் தாமரை குவளை நீலம் முதலிய மலர்களுக்கு இல்லை. இதனால் இவை தலைவியின் கண்களை ஒவ்வா. ‘மலர் காணின் மையாத்தி நெஞ்சே யிவள் கண் பலர்காணும் பூவொக்கும் என்று என்பது குறள். இதன் பொருள், நெஞ்சே, யானே காணப்

(5ம் பக்கம் பார்க்க)

## தவக்காலத்தின்



## 15-ம் நாள்

“கட்டுவோர் விலக்கிய
கல்லே
மூலைக்கல்லாய் அமைந்தது”
[மத்; 21/42]

அவசியமில்லையென்று தகர்த்தெறியப்பட்ட கிறீஸ்துவாகிய கல், இந்த உலகம் என்ற பெரிய கட்டிடத்தை மீட்பு என்னும் அத்திவாரத்தில் தாங்கி நிற்கின்ற மூலைக்கல்லாக உயர்த்தப்பட்டது. படைக்கப்பட்ட பொருட்கள், மனிதர்கள் அனைவரும் தராதர மதிப்பீட்டைக் கடந்து மதிக்கப்பட வேண்டும் என்பதே இதில் ஊறியுள்ள உண்மை.

நான் எல்லோரையும் மதித்து வாழ-ஏற்று வாழ, அன்பு செய்து வாழ அழைக்கப்பட்டவன். ஆனால் நான் என்ன செய்கிறேன்? எனக்கு விருப்பமானவர்களையும், என்னை அன்பு செய்கின்றவர்களையும், எனது குற்றங் குறைகளைக் கண்டும் எடுத்துரைக்காதவர்களையும், செல்வச் செழிப்புள்ளவர்களையும், படித்தவர்களையும் அல்லவா மதிக்கின்றேன். ஏழைகள் — அனாதைகள் — அன்பை அறியாதவர்கள்— பாமரர்கள் தாழ்ந்தவர்கள்— பாவிகள், இவர்கள் எல்லோரையும் நான் தள்ளியல்லவா வைக்கின்றேன். இவர்கள் தான் விண்ணரசின் மதிப்பிடுகள் என்பதையல்லவா மறைக்கின்றேன்

ஆம், நான் உண்மையுள்ளவனாக வாழ்ந்து எல்லோரையும் ஏற்று வாழ வேண்டும். மதித்து வாழ வேண்டும். எனக்கு விருப்பமில்லாதவர்களை இன்னும் அதிகமாக நேசிக்க வேண்டும்.

“உங்களுக்குள்ளே உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் என்றும் பேதங்கள் வேண்டாம்.”

அருள் திரு. ம. போல்

நட்சத்திரம், அ. ம. தி

# மாநில நிலைமை மாற்றமில்லை

(புதுடில்லி)

இந்தியாவின் பதினொரு மாநிலங்களிலும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் ஏற்கனவே ஆட்சி செய்துவந்த சகல மாநிலங்களையும் இந்திரா காங்கிரஸ் மீண்டும் தம்வசப்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் ஜனதாக் கட்சி முன்னரைவிட கூடுதலான தொகுதிகளைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளது. ஆந்திரா மாநிலத்தில் என்.ரி.ராமராவ் தலைமையிலான தெலுங்குதேசம் கட்சியும் அமோக வெற்றியீட்டியது.

## புதுச்சேரி

புதுச்சேரி சட்டசபைத் தேர்தலில் இ காங்கிரஸ்— அ தி மு. க. கூட்டணி வெற்றிபெற்றுள்ளது. முன்னர் தி.மு.க — இ காங்கிரஸ் கூட்டணி ஆட்சிசெய்து வந்தது இரு கட்சிகளுக்கு மிடையேயான உறவு முறிந்ததைத் தொடர்ந்து சட்டசபை கலைக்கப்பட்டது.

முடிவுகள் வருமாறு:
மொத்த இடம்: 30
இ. காங்கிரஸ் 15
அ. இ. அ. தி. மு. க. 6
தி. மு. க. 5
ஜனதா 2
சுயேட்சை 2

## மத்தியப் பிரதேசம்

மத்தியப்பிரதேச மாநிலத்தை இ காங்கிரஸ் மீண்டும் தனதாக்கிக்கொண்டுள்ளது. 320 தொகுதிகளைக்கொண்ட சட்டசபையில் இ. காங்கிரஸ் 250 இடங்களைக் கைப்பற்றியது.

முடிவுகள் வருமாறு;
மொத்த இடம்: 320
இ. காங்கிரஸ் 250
ஜனதா 5
காங்கிரஸ் எஸ் 1
பாரதிய ஜனதா 58
ஏனையவை 6

## மகாராஷ்டிரம்

மகாராஷ்ர மாநிலத்தையும் இந்திராகாங்கிரஸ் மீண்டும் தனதாக்கிக்கொண்டது.

288 தொகுதிகளைக்கொண்ட சட்டசபையில் இ. காங்கிரஸ் 161 இடங்களைக் கைப்பற்றியது. இந்த மாநிலத்தில் காங்கிரஸ் எஸ் 56 தொகுதிகளைக் கைப்பற்றி பிரதான எதிர்க் கட்சியாகியுள்ளது.

முடிவுகள் வருமாறு:
மொத்த இடங்கள் 288
இ. காங்கிரஸ் 161
காங்கிரஸ் எஸ் 56
ஜனதா 20
பாரதிய ஜனதா 16
கம்யூனிஸ்ட் 2
மாக்ஸிச கம்யூனிஸ்ட் 2
பி. டபிள்யூ பி. 12
ஏனையவை 19

## சிக்கிம்

வடமாநிலங்களில் சிக்கிம் மாநிலத்தில்மட்டுமே இந்திரா காங்கிரஸ் தோல்வி அடைந்துள்ளது. சீனாவின் எல்லைப்புற மாநிலமான சிக்கிமில் சிக்கிம்சம்ராத் பரிஷித் அமோக வெற்றிபெற்றுள்ளது. 32 தொகுதிகளைக்கொண்ட இந்த மாநிலத்தில் நேற்று நண்பகல் வரை 30 இடங்களின் முடிவுகள் மட்டுமே வெளியாகி இருந்தது.

முடிவுகள் வருமாறு:
மொத்த இடம் 32
சிக்கிம் பரிஷித் 29
இ. காங்கிரஸ் 1
சுயேட்சை 1

## கர்நாடகம்

கர்நாடக மாநிலத்தில் ஜனதாக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. கடந்த டிசம்பரில் நடைபெற்ற லோகசபைத் தேர்தலில் இந்த மாநிலத்திலுள்ள 28 தொகுதிகளில் 24 இடங்களில் இ. காங்கிரஸ் வெற்றி அடைந்ததைத் தொடர்ந்து அங்கு ஆட்சியிலிருந்த ஜனதாக்கட்சி அமைச்சரவையை முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே கலைத்தார்.

இப்போது ஜனதாக்கட்சி முன்னரைவிட கூடுதலான இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

முடிவுகள் வருமாறு:
மொத்த இடம் 224
வெளியாவை: 222
ஜனதா 139
இ காங்கிரஸ் 64
மார்சிஸ கம்யூனிஸ்ட் 2
கம்யூனிஸ்ட் 4
பாரதீய ஜனதா 2
ஏனையவை 11

## ராஜஸ்தான்

ராஜஸ்தான் மாநிலத்தில் இந்திராகாங்கிரஸ் முன்னணியில் திகழ்கிறது. ஆனல் கலைக்கப்பட்ட சட்டசபையில் 148 இடங்களைப் பெற்றிருந்த இ. காங்கிரஸ் இம்முறை இதைவிட குறைவாகவேபெற்றுள்ளது. 200 இடங்களைக் கொண்ட சட்டசபையில் 198 முடிவுகள் வெளியாகியிருந்த போது இ. காங்கிரஸ் 113 இடங்களைப் பெற்றிருந்தது

குஜாராத், பீகார், இமாலயப்பிரதேசம், ஒரிசா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இந்திராகாங்கிரஸ் முன்னணியில் திகழ்ந்தது.

# சுழிபுரம் பகுதியில் மின் விநியோகம்

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராமம் பூராகவும் மின்சாரம் பாவனையாளர்களுக்கு வழங்கச் சுழிபுரம் அபிவிருத்தி உப-அலுவலக மின்சாரப் பொறுப்பாளர் ஏற்ற நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்.

மின்விஸ்தரிப்பு வேலைகளை மிகத்துரிதமாகச் செய்துவரும் இவ் வதிகாரி மேலதிகமான இணைப்புக்களைப் பொருத்தி விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளார்! வழக்கம்பரையில் அமைந்துள்ள மின்மாற்று நிலையத்திலிருந்து சுழிபுரம் பகுதிக்கு மேலதிகமாக மூன்றுஇணைப்புக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

# ஆளுநர் பேரவைக்கு தெரிவு

[சுண்டுக்குளி]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் புவியியற்றுறைப் பேராசிரியரும், அதன் தலைவருமான கலாநிதி.பொ. பாலசுந்தரம் பிள்ளை பல்கலைக்கழக ஆளுநர் பேரவை அங்கத்தவராக இம்முறையும் தெரிவானர். சென்ற முறையும் ஆளுநர் பேரவை அங்கத்தவராக இருந்தவர் என்பதும், பல்கலைக்கழக மூதவைக்குழுவின் நீண்டகால உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் புவியியல்தொடர்பாக இவர் எழுதி வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல மேனாட்டறிஞர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன.

# இடமாற்றம்

[சுண்டுக்குளி]

யாழ். செயலகத்தில் அமைந்துள்ள புடவைக் கைத்தொழில் கிளையில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு வி. வி. இராமநாதன் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும், கணக்குக் கிளையில் லிகிதராக கடமையாற்றிய திரு. ஏ ஜி. சேகரம் உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும் இம்மாதம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர்.


மிளகாய் இலைச் சுருளைத் தடுதது
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

Metropolitan

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2,ஞானர்த்தபிரதீப மாவத்தை, த பெ.இல.9
(முன்னுள் மருதானைரேட்) கொழும்பு - 8
தொலைபேசி; 597965——9


# யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)
(யாழ்ப்பாணம்)

திரு வி என் செல்வரட்ணம்- நோட்டன் பிறிட்ஜ், திருமதி எஸ் தங்கராஜா- லிந்துல, திரு சி குழந்தைவேலு- நோர்வூட், திருமதி எல் குழந்தைவேலு- நோர்வூட், திரு ரி கதிரேசு- அக்கரபத்தன, செல்வி எம் சின்னத்தம்பி- நுவரெலியா, திரு ரி நாகராஜா- மஸ்கேலியா, திரு எஸ் துரைராஜா- ஹட்டன், திருமதி ஏ ஆர் ராசநாயகம்- போகவந்தலாவ, திரு கே செல்வநாயகம்-பத்தன.

திரு எம் மரியதாஸ்- மடுகோவில், திருமதி கே லோகநேசன்- புளத்கொஹாபிட்டிய, திரு கே கமலாந்தன்- போகவந்தலாவ, திரு எஸ் சந்திரராசா- கிளிநொச்சி- திருமதி எ செந்தில்நாதன்- புதுக்குடியிருப்பு, திரு வி புவனேந்திரன்- பூண்டுலோயா.

## கலைப்பட்டதாரி ஆசிரியர்கள் இடமாற்றம்-1985

திரு எல் வரதராஜா- திருகோணமலை, திரு ரி கதிரவேலு- வவனியா, திருமதி எ சிவசக்திவேல்- பதுளை, திருமதி பி வாமதேவன்- மாங்குளம், திருமதி பி சோமசுந்தரம்- தெஹிவளை, திரு என் கனகசிங்கம்-கண்டி, திருமதி பி முத்துக்குமாரசாமி-திருகோணமலை, திருமதி ஆர் நாகராஜா- கொழும்பு- 13, திரு பி பஞ்சாட்சரன்- பரந்தன்

## விஞ்ஞான பயிற்சி ஆசிரியர்கள்

செல்வி சந்திரா வரதராஜா- கண்டி, திரு என் தாமோதரம்- முல்லைத்தீவு, செல்வி- வி குலநாயகம்-கிண்ணியா, திருமதி எஸ் சண்முகநாதன்- திருகோணமலை, செல்வி புஷ்பராணி பாலசிங்கம்- மன்னார், திருமதி எஸ் தங்கரத்னவேல்- கொழும்பு 13, திரு என் ஜெயசீலன்- பம்பலபபிட்டிய-கொழும்பு-4, திருமதி பி ஐங்கரநாதன்- கொழும்பு-3, திரு கே ஸ்ரீ வேல்நாதன்-பளை, திருமதி ரி கணேசலிங்கம்- வவனியா, திருமதி மேரி சிவராஜா- ஓமந்தை, திரு மொஹமது மீராபிள்ளை தாலிவ்-வவனியா

செல்வி எஸ் பொன்னையா- மன்னார், திரு கே விக்னேஸ்வரன்- முருங் ன், திருமதி எஸ் ராஜேந்திரன்- கலகெதிஹென, செல்வி சபாரத்தினம்-வத்தளை, திரு பி நாகரட்ணம்-வவனியா, திருமதி சி அரியரத்தினம்- வவனியா.

## தராதரப் பத்திரமற்றவர்கள்.

திருமதி பி தேவசகாயம்- ரத்தோட்ட,திரு என் தங்கத்துரை- பதுளை, திரு எஸ் பொன்னுத்துரை- பதுளை, திரு ரி தாமோதரம்பிள்ளை- பண்டாரவளை, திரு ரி புண்ணியமூர்த்தி- பண்டாரவளை, திரு பி நவரட்ணம்-ஹாலிஎல திரு கே குணநாயகம்- அக்கரபத்தன, திருமதி கே ரட்ண சபாபதி- ராதெல்ல, திரு ஏ குகபாலசிங்கம்- நுவரெலியா, திரு என் தங்கராஜா- லிந்துல, திரு ரி நாகராஜா- மஸ்கேலியா, திருமதி எஸ் கந்தசாமி- தலவாக்கல்ல, திரு என் தியாகராஜா- மத்துகம, திரு எஸ் ஜெயசுந்தரம்-புப்புரெஸ்ஸ, திரு ஆர் செல்லப்பா- கண்டி, திரு கே சுந்தரமூர்த்தி-கண்டி,

திரு எ சதாசிவம்- மஸ்கேலியா, திரு கே தர்மலிங்கம்- கஹவத்த, திருமதி என் ராஜரட்ணம்- பொரகாஸ்.

## கணிதம் பயிற்றப்பட்டவர்கள்

திரு கே வளநாதன்-மஹினூர், திரு ஈ நவரட்ணம்- பளை, திரு எஸ் மாதவ குமாரன்- உருத்திரபுரம், திரு ஆர் மனோகரன்-கண்டி. திரு ஆர் மனோகரன் கண்டி, திரு எஸ் டியூக் பாலகுணளன்-புசல்லாவ, திரு எஸ் சங்கரப்பிள்ளை - தம்புள்ளை, செல்வி ஆர் சரவணமுத்து- முள்ளியவளை, திருமதி எஸ் தரமராசா - ஒட்டுசுட்டான், திரு வி செல்வராஜா-முல்லைத்தீவு, திரு கே உபேந்திரன்- குமுணமுனை, திரு எஸ் யோகேஸ்வரன்-வவுனியா, செல்வி வி நடராஜா-பண்டாரிகுளம். திரு சி சுப்பிரமணியம் - வவுனியா, திரு கே சந்திரசேகரம் -திரியா, திருமதி ஜோய் ரி அரியதேவா-கிண்ணியா, திரு எம் விசுவநாதர்-நாவலப்பிட்டிய, திரு எஸ் சிவபாதவிருதயர்-தெமட்டகொட கொழுபபு-9. திரு ரி நடராசா-மந்தந்தவெல திரு எஸ் ஸ்ரீஸ்கந்தராஜா - எலமல்பொத்த, திரு வி பத்மநாதன்-தம்பிறுவில்லு, செல்வி ரி கணபதிப்பிள்ளை-பதுளை, திருமதி எ. என் பழனிமலர்நாதன் - பண்டாரவளை திருமதி எஸ் பரம்சோதி-தலவக்கெல்ல. செல்வி ரி ஆரோக்கியம்-பொலன்நறுவ. திருமதி எம் ஜி சுப்பிரமணியம்-வவுனியா, செல்வி எஸ் சின்னத்துரை-கொழும்பு- 13, திரு என் லோகேஸ்வரன்- வவுனியா, எ. ஸி தமீம் இரனை - இலுப்பைக்குளம், திரு கே மனோரஞ்சன்-மாங்குளம்.

(மிகுதி நாளைவரும்)

# தொண்டர்கள் சிரமதானம்

[வண்ணார்பண்ணை]

நல்லூர், கல்வியன்காடு இலங்கநாயகி அம்பாள் ஆலயத்தில் இம்மாதம் 6-ம் திகதி முதல் நடைபெறும் மாசிமக லட்சார்ச்சனை உற்சவத்தை முன்னிட்டு, யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்கள் சிரமதான மூலம் ஆலய சுற்றுப்புறம் சுத்தம் செய்யும்பணியில் ஈடுபட்டனர்.

இப் பேரவையின் தொண்டர் பிரிவுச் செலாளர் திரு இ. சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானத்தில் 25 தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# ஆலய புனரமைப்பு வேலைகள்

(வண்ணார்பண்ணை)

கொழும்புத்துறை ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகரம்பிள்ளையார் ஆலயத்தில் 50,000 ரூபாவுக்கு அதிகமான செலவில் புனரமைப்பு வேலைக்ள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாலய பரிபாலன சபை இதற்கான நிதியை ஒதுக்கியிருந்தது.

**றீகல் மினி**
தினசரி 10-15, 1-30
பாண்டியன், ரேவதி நடிக்கும்
பாரதிராஜாவின்
**மண்வாசனை**

**றீகல்**
தினசரி 10-30, 2-00
AN OFFICER AND A CENTLEMAN
(Adnlts only)

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி, கே.ஆர்.விஜயா, நடித்த
**கிரஹப்பிரவேசம்**

**வெலிங்டன்**
(யாழ் நகர்)
10-15, 12-15, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த
**நீதிபதி**
(கலர்)

**யாழ். வின்சர் மினி**
7-3-85 வியாழன் முதல்
சிவாஜி-பிரபு-K R.விஜயா ராதா நடித்த
**'சிம்ம சொப்பனம்'**
[கலர்]
தினசரி 10-30, 2-15

WINDSOR
KUNG FU EXECUTIONER
4-3-85 முதல்
THE HOUSE WHERE EVIL DWELLS
Horror - Action - Suspense
Daily 10-30, 2-00, 4-15
குங்பூ சண்டைக் காட்சிகள் நிறைந்த சித்திரம்
(வயது வந்தவர்கட்கு மட்டும்)

**மனோகரா மினி**
இன்று முதல்
கண்ணன். ராதா
**காதல் ஓவியம்**
(கலர்)

MANOHARA
Daily 10-30, 2-51, 4-15
Muhammed Ali in
BODY AND SOUL
(Strictly For Adults)
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும். பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

**மலிவு விற்பனை**
**20% குறைப்பு**
★ அலுமீனியம் ★ எவர்சில்வர்
பாத்திரங்கள் 20% கழிவுடன் விற்பனையாகிறது.
உங்கள் தேவைக்கு
**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**
257, காங்கேன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2136

# ஓர் அறிவித்தல்

வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், வியாபாரிகள் அனைவருக்கும்

**தோலகட்டி நெல்லி ரசம் – முந்திரிகை ரசம் பற்றிய முக்கிய அறிவித்தல்**

எமது தயாரிப்புகள் போன்று எமது லேபல்களை ஒத்த போலி லேபல்களில் நெல்லி ரசம், முந்திரிகை ரசம் யாழ்நகரில் விற்பனையாவது எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நாம் முன்பு அறிவித்தல் கொடுத்திருந்தோம். ஆனாலும் சில பிரபல யாழ். நகர் வர்த்தகர்கள் போலி நெல்லிரசம், முந்திரிகை ரசம் இன்றும் விற்பது எமது மனத்தை மிகவும் வேதனைக்குள்ளாக்குகின்றது. அத்துடன் மட்டுமல்லாமல் எமது பெயரைப் பயன்படுத்தி நெல்லி ரசம், முந்திரிகை ரசம் போன்றவற்றை விற்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். போலிகள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் இரசாயன சேர்வைகள் கொண்டு தயாரிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் இவற்றை தடைசெய்வதற்கும், எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கும் எமது முகவர்களாக —ஜோ. எகட்டன் செனித் மார்க்கட்டிங், யாழ்நகர் என்பவரை நியமித்துள்ளோம். உங்கள் தேவைகளுக்கு வாரம் தோறும் அவர்கள் உங்களைச் சந்திப்பார்கள். தோலகட்டி தயாரிப்புக்களை கவனித்து வாங்கவும். எமது அசல் லேபல்களில் கோயில் தூண் வலப்பக்கமும், போலிகளில் இடப் பக்கமும் இருக்கும்.

நெல்லி ரசம் 22/50 சதம்
முந்திரிகை ரசம் 24/50 சதம்

இலங்கை முழுவதும் ஏஜன்ட்:
**ஜோ—எகட்டன்**
செனித் மார்க்கட்டிங், யாழ்நகர்.

யாழ்நகரில் ஏக கையிருப்பாளர்கள்:
**வரணி மிஷன் பாம்**
(விற்பனை நிலையம்)
145, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

செபமாலை தாசர் சபை
தோலகட்டி,
வசாவிளான்.
2139


# இனத் துரோகிகளை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
சியமான மருத்துவவசதிகளை தமிழீழ வைத்தியசாலைகளைப் பொறுத்தவரை தடைப்படுத்துவதும் அரச இராணுவத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுத்துவதும் இம்மண்ணிற்கு மிகப் பரிச்சயமாக்கப்பட்டுவருகின்றன.

''நெருக்கடிமிக்க இச்சூழ்நிலையில் தமிழீழப் பிராந்தியங்களின் சமூக விரோத சக்திகளால் எம்மக்கள் தொடர்ந்தும் கருவறுக்கப்படும்நிலையை களையவேண்டிய பாரிய பொறுப்பிலிருந்து தமிழ்த்தேசிய விடுதலையை முன்னெடுக்கும் எச்சக்தியும் விடுபடமுடியாது. சமூகத்தின் சகல மட்டங்களிலுமுள்ள இவ்விரோத சக்திகளை அவர்தம் செயற்பாடுகளைக் கொண்டு இனங்காணக்கூடியதாயிருப்பினும் சமூகத்தின் அடித்தளத்திலுள்ள சமூக விரோத சக்திகளையே மக்கள் நேரடியாகக் காண்கின்றனர். ஆனால் சமூகத்தில் உயர் அந்தஸ்தினை வகித்துக்கொண்டு, மிக அந்தரங்கமான முறையில் ஜிரணிக்கமுடியாததும், மன்னிப்புக்கப்பாற்பட்டதுமான எத்தனையோ துரோக நடவடிக்கைகளை தம்சுயவிருத்தி, சுயநலன் என்பன கருதி இப்''பெரியமானிடர்'' எனப்படும் இச்சமூகவிரோதிகள் மேற்கொள்கின்றனர்.

''மிகக்கேவலம்! அவலத்தின் அலைகளில் எம்மக்கள் தத்தளிக்கும் போது அரசின் நெருக்கமான அடிவருடிகளாக இருந்தவண்ணம தம்மேம்பாட்டினை அல்லற்படும் எம்மக்களின் அவலவுணர்வுகளினூடாக கட்டியெழும்பும் இம்மானிடர் மன்னிப்புக்கப்பாற்பட்டவர்களே. இச்சமூக விரோத சக்திகளின் அந்தஸ்து, ஆளுமை, தந்திரோபாயம் அறிவுத்திறன்கள். என்பன மூலம் வெளிவரமுடியாத நேர்மையும், நியாயமற்ற இழிவுச் செயற்பாடுகளை இவ்விரோதிகள் ஆதரவுசக்திகள் மனரீதியாக அறியாதிருக்கலாம். ஆனால் இவர்களால் பாதிப்புற்ற மக்கள் உறுதியாக அறிந்திருக்கின்றனர், அநுபவித்தே அவஸ்தைப்படுகின்றனர்

இவ்வகையில்தான் முல்லைத்தீவு மக்களின் நிலையும் இச்சமூக விரோதிகளின் நடவடிக்கைகட்கு ஆட்பட்டிருக்கின்றது. உருக்குலைந்து போன தமிழீழப் பிரதேசங்களில் முல்லைத்தீவு மாவட்டமும் ஒன்றாகும். எண்ணிக்கையற்ற முறையில் தமிழ்மக்கள் பலர் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டும். அவர்களது உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டும், இன்னும் மோசமான நிலையில் தம்சுய இருப்பிடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டும், அவ்வகதிகள் முகாம்களில் எவ்வித அடிப்படை வசதிகளும் அளிக்கப்படாமலும் அம்மக்கள் துயரப்படுகிறன்ர்.

பரிதாபகரமான நிலையில்' மனிதாபிமான நோக்கோடு எத்தனையோ சமூக பொது ஸ்தாபனங்களுட்பட தமிழீழ மக்கள் அனைவரும், தத்தம் இயலளவிற்கேற்ப இம் மக்களிற்கு உதவிக்கொண்டிருக்கின்றனர் ஆனால் அப்பிரதேசத்துக்குரிய அரச உயர் நிர்வாகபீடபிரதிநிதியான அரசாங்க அதிபர் க.ஞானச்சந்திரன் இம் மக்களின் துன்பதுயரத்திற்கு பரிகாரமாக தன் அதிகார வரம்பிற்குட்பட்ட வகையில் எவ்வகையான நடவடிக்கையும் குறுகியளவில் கூட மேற்கொள்ளவில்லை. பதிலாக துரோகத்தனத்திலே தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்

முல்லைத்திவு மக்களின் சமூக நலன்களையும் அத்தியாவசிய தேவைகளையும் ஓரளவிற்கேனும் நிறைவேற்றுவதில் தேயைான அதிகாரங்களைக் கொண்ட அரசாங்க அதிபர் க.ஞானச்சந்திரன் இதற்கு மாறுபாடாக நடந்து கொண்டமையை முல்லைத்தீவு மக்கள் நன்கறிவர். அதீதஅரசு விசுவாசம், அடிவருடித்தனம் என்பனவற்றில் தனித்துவத்தைப் பெற்றிருந்த க.ஞானச்சந்திரன் முழுமையான அளவில் ஒரு பக்கச் சார்பாக அப்பகுதியில் குடியேறிய சிங்கள மக்களுக்காகவும், தனக்காகவுமே அரசாங்க அதிபராக இருந்துள்ளார். தன் இனத்துக்குத் தான் ஆற்றவேண்டிய தார்மீகக் கடமைகளையாவது நிராகரித்திருப்பினும் தனக்கும் தன் பதவிக்குமுரிய மகத்துவத்தையாவது அப்பகுதிவாழ் தமிழ் மக்களிடமிருந்து பெறவேயில்லை. பதிலாக இம் மண்ணிற்கும் மக்களுக்கும் இவர்மூலம் கிடைக்கப்பெற்றவை துரோகத்தனங்களே! வரலாறும் மன்னிக்காத அவற்றினை முல்லைத்திவு மக்கள் சார்பில் தமிழீழ மக்கள் முன் வைக்கிறோம்.

முல்லைத்திவு மக்களது அகதிகள் நிவாரணத்திற்கென தனியார், பொது ஸ்தாபனங்களால் இவருடாக வழங்கப்பட்ட நிதியுதவிகளை நிராகரித்ததோடு மிகுதி நிதியைத் தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு வழங்கியமை.

டொலர், கென்பாம், கொக்கிளாய், நாயாறு பகுதிகளிலிருந்து சிங்கள குடியேற்றவாசிகட்குப் புரிந்த உதவிகளில் சிறு விகிதத்தைத்தானும் இராணுவ கெடுபிடிகளால் அல்லற்பட்டுத் தொழில் வாய்ப்பினை இழந்த தமிழ்அகதிகட்கு வழங்க மறுத்தமை.

1984ம் நிதியாண்டிற்கு முல்லைத்தீவு மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியை நேரடியாகத் தேசிய பாதுகாப்பு நிதியத்திற்குவழங்கியமை,

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான முல்லைத்தீவிலுள்ள குருந்தூர் மலைக்குடியில் பௌத்த கோயிலை நிறுவுவதற்கு ஏற்ற உதவிகளை, அவ்வூர் தமிழ் மக்களின் நலன்கள் இதனால் மோசமடைவதைக் கண்டும் வழங்கியமை.

அகதிகள் நிவாரணத்திற்கு என வழங்கப்பட்ட பால்மாவின் மீன் விநியோகத்தில் ஊழல் மோசடி செய்தமையுடன், அல்லற்படும் இம்மக்களிடையே லஞ்சம்பெற்றமை.

1983ம் ஆண்டு வெள்ள நிவாரணநிதியில்கையாடலும், அதைப் பிழையாகக் கையாண்டமையும்

உயர் நீதிமன்ற நீதிபதியாகுவதற்காக, தமிழீழப் போராளிகள் (சக விடுதலையமைப்புகள் உட்பட) பற்றிய தகவல்களை இராணுவத்தினருக்கு வழங்கியமை (ஆதாரபூர்வமாகஉறுதிப்படுத்தபபட்டது.)

கடத்தப்படும் அரச வாகனங்கட்குஅவ்வாகனப்பொறுப்பாளரே நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென நிர்ப்பந்தித்தமை

தென்னைமரமாவடி, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், தண்ணிமுறிப்பு, பொன்மலை, குமிழமுனை, ஒதியமலை ஆகிய பகுதிகளிலிருந்து அகதிகளாக வெளியேறிய தமிழ் மக்களை மீண்டும் குடியமர்த்தக்கோரியபோது அசிரத்தையும் ஆத்திரமும் கொண்டமை.

விரட்டியடிக்கப்பட்ட காடையர் குடியேற்றத்தை மீண்டும் ஆயுதங்களுடன் குடியேற்ற முழுமூச்சாக முயற்சி செய்து வந்தமை.

பணத்திற்காக அதிகார துஷ்பிரயோகத்தில் தொடர்ந்து ஈடுபட்டமை. (நீதவான் நீதியன்ற நீதிபதியாக இருந்த காலம்தொட்டு)

இதுபோன்ற ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே நாம் விசாரணைகளை மேற்கொண்டு இவ

(6ம் பக்கம் பார்க்க)

# இன்று திரு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]
பெற்ற இவள் கண்களை பலராலுங்காணப்படும்பூக்களை ஒக்குமென்று கருதி தாமரை குவளைநீலம் முதலிய மலர்களைக் கண்டு மயங்கினாய். நின்னறிஎன்னே.

## ஈகைபற்றி

திருவள்ளுவர் ஈகைபற்றிக் குறிப்பிடும்போது வந்தவர்களுக்கு இல்லைஎன்னாது கொடுக்கும் பண்பு குலத்திற் பிறந்தாரிடத்திலே உண்டு என்கிறார்.

''இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையார்கண்ணேஉள'' என்பது குறள். இந்தக் குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் என்பதற்குப் பொருள் கூறும்போது ஒருவன் தன்னிடம் வந்த வறியவன் இல்லையென்று சொல்லுமுன்னரே குறிப்பறிந்து கொடுக்கவேண்டும் என்றும் வறியவன் வேறு ஒரு வீட்டிற்குப்போய் இல்லை என்று சொல்லாத அளவிற்குப் போதிய அளவு கொடுக்க வேண்டும் என்றும் வறியவனைப் பார்த்து ஒருவன் என்னிடம் இல்லையென்று சொல்லாது கொடுக்கவேண்டும் என்றும் பொருள் கூறுகிறார். இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் என்ற திருக்குறள் அடி வள்ளுவரின் இலக்கியச் சிறப்பைக் கூறுகிறது. அதற்கு விளக்கம் கூறியமை பரிமேலழகரின் இலக்கிய ரசனையை விளக்குகிறது

## வள்ளுவர் பற்றி

தன்னிகரில்லாத் தண்டமிழ்ப் புலவராகிய வள்ளுவர் பற்றித் திருவள்ளுவ மாலையில்'' வரும் ஒருபாடல் ''சாற்றிய பல்கலையுந்தப்பா அருமறையும் போற்றியுரைத்த பொருளெல்லாந் தோற்றவே முப்பான் மொழிந்த முதற்பாவலரொப்பர் எப்பாவலரினுமில் என்கிறது. இப் பாடலின் பொருள்: அறி அறிவுடையோராற் சொல்லப்பெற்ற பல நூல்களாலும் தப்பாத அரிய வேதத்தினாலும் காப்பாற்றி வைத்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பெற்ற பொருள்களெல்லாம் தன்னிடத்தே காட்டும்படி சொல்லிய திருவள்ளுவரை யொப்பார் எவ்வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை'' என்பதாம்.


# BECON
## STUDY CENTRE
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

**86 A/L**

PHY — சௌந்தி
CHE — சண், சிவா

**PUR, APP மீண்டும்**
அதே ஆசிரியரால்

ஆரம்பம்: 9–3–85
நேரம் 1-30

## பிரதமர் அறிக்கை

(கொழும்பு)

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் பின்போடப்பட்டமைக்கான காரணங்களை விளக்கி பாராளுமன்றத்தில் நேற்று அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

'உலக கிண்ணக் கிரிக்கெட்'

## 3-வது இடத்துக்கு நாளை போட்டி

[மெல்போன்]

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 'உலக வெற்றி கிண்ணக்' கிரிக்கெட் போட்டியில் மூன்ருவது இடத்துக்கான போட்டி நாளை நடைபெறவுள்ளது. இப்போட்டியில் மே. இந்தியக் கோஷ்டியும், நியுஸிலாந்துக் கோஷ்டியும் மோதுகின்றன.

மே இந்தியக் கோஷ்டி பாகிஸ்தானிடமும், நியுஸிலாந்துக் கோஷ்டி இந்தியாவிடமும் தோல்வியடைந்தது தெரிந்ததே. [வி]

## ஆசிரியர்களுக்கு விளக்கம்

(மாவிட்டபுரம்)

பாடசாலைகளில் அமுல்செய்யப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு அதிபர்கள் ஆற்றவேண்டிய பங்கு பற்றி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் அதிபர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை கல்வி வட்டார பாடசாலைகளில் 1-ம், 4-ம் வகுப்புகளில் கடந்த ஜனவரி மாதம் முதல் புதியபாடத் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகிறது இதுகுறித்து ஏற்கனவே ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது.

## கடலூர் படகு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யொட்டி கடலில் நீராடுவதற்கு 85 லிருந்து 100 வரையிலான பயணிகளுடன் இந்தப் படகு சென்றபொழுதே இந்த விபத்து ஏற்பட்டதென்றும், விபத்திலிருந்து 50 பேர் தப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## இனத்துரோகி...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

ருக்கு மரண தண்டனை நிறைவேற்றினேம்.

எம்சமூகஅமைப்பிலே, உயர் அந்தஸ்தினை அநுபவிக்கும் பல சமூக விரோதிகள் தம்பதவி, பணம், அந்தஸ்து, ஆளுமை, தந்திரோபாயங்கள் போன்றவற்ருல் மூடிமறைக்கப்படும் தம் விரோத செயற்பாடுகளுடன் மகத்தான மனிதர்களாகவே உலாவி வருகின்றனர். ஆனல் பல சமூக காரணிகளின் விளைவாக சமூகத்தின் அடித்தளத்திலிருந்து வரும் சமூக விரோதிகளே தம்சமூகவிரோத செயற்பாடுகளையிட்டு தண்டனையை அனுபவிப்பதை தமிழீழ வீதிகளில் காண்கின்ருேம். அதேசமயம், உயர் அந்தஸ்திலுள்ள இச்சமூக விரோதிகள் தண்டனைகளிலிருந்து தப்பித்த வண்ணமே இருக்கின்றனர். எனவேஇத்தகைய சமூகவிரோதிகளை தமிழீழ மண்ணிற்கு இனங்காட்டவேண்டிய பாரிய பொறுப்பினை தமிழீழ விடுதலையை முன்னெடுககும் எச்சக்திகளும் நிராகரிக்க முடியாது. [மா]

## கிளிநொச்சி-கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனத்தில்

# 5 லட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இனம் தெரியாத நபர்கள் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பணயம் வைத்து சுமார் 5 லட்சத்திற்கு மேல் பெறுமதி வாய்ந்த கட்டிடப் பொருட்களையும் மின்சார உபகரணங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

லொறிகளில் திடீரென செவ்வாய்கிழமை இரவு வந்திறங்கிய சுமார் 20 இனம் தெரியாத நபர்கள் பிரஸ்தாப கொள்ளையை நடத்தினுர்களாம்.

உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் மேசை, கதிரை உட்பட இரும்புச்சாமான்கள் தகரச்சீட்டுக்கள் பைப்புக்கள் உட்பட கிளிநொச்சி கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் உள்ள சகல பொருட்களும் கொள்ளையடிக்கடபட்டுள்ளதாம்.

கண்ணுடிச் சாமான்கள் மட்டுமே எஞ்சிக் காணப்படுகிறது. ஏற்கனவே பல தடவைகள் இக்கூட்டுத்தாபனத்தில் கொள்ளையடிக்கப்பட்டதும் குறிப்பிடத்தககது.

கொள்ளையைத் தொடர்ந்து இக்கூட்டுத்தாபனத்தை அனுராதபுரம் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரியவந்தது.

## பவுண் சம்பந்த...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

குச்சென்ற பக்தர்கள் தாங்கள் அணிந்திருந்த நகைகளையும் மற்றும் பவுண் பொருட்களையும் அம்பாளுக்கு அணிகலன் செய்யும்படி வலியுறுத்தி அவற்றைக் கொடுக்க முயற்சித்ததாகவும் ஆனல் ஆலயநிர்வாக சபையினரோ, பாதுகாப்பின்மை காரணமாக மேலும் அவலங்கள் நேரிடலாம் என்று அஞ்சி நகைகளையும் அப்பவுண் சம்பந்தமான பொருட்களையும் அறவே வேண்டாமென்றுஏற்க மறுத்துவிட்டதாகவும் அம்பாள் பக்தர்கள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க சம்பவதினம் இரவு ஆலயத்திலிருந்து நவரத்தினக் கற்கள் பதிக்கப்பெற்ற அழகான 91 அரைப் பவுண் எடையுள்ள அணிகலன்களும், ரொக்கப் பணமாக சுமார் 25 ஆயிரம் ரூபாவும் கொள்ளையடிககப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை அடிக்கப்பட்ட பவுண்நகைகள் துர்க்காதேவிக்குப் பக்தர்களால் அன்பளிப்பாக-உபயமாக வழங்கப்பட்ட பவுண் பொருட்கள் என்று நிர்வாகசபை தெரிவித்துள்ளது.

ஆலயத்தில் இடம்பெற்ற கொள்ளை, தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து பல்வேறு சமூகசேவை ஸ்தாபனங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் அறிக்கைகளும் பிரசுரங்களும் வெளியிட்டுள்ளன.

### யாழ். பல்கலைக்கழக ஆசிரிய சங்கம்

யாழ். பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''அண்மையில் தெல்லிப்பழைத் துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கொள்ளைபற்றி அறிந்துஆழ்நத கவலையையும் அதிர்ச்சியையும் வெளிப்படுத்துகிருேம். அவ்வாலயத்தின் நிர்வாகியாகிய சிவத்தமிழ் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கு ஏற்பட்ட இம்சையையும் அவமதிப்பையும் அறிந்து தமிழ் உலகமே குறிப்பாக தமிழ்ப் பெண் உலகமே வெட்கித் தலைகுனியும் நிலை தோன்றியுள்ளது. தமிழர்களுக்கென்ற தனிப் பண்பாடு ஒன்றுண்டு. அதனை எந்நிலையிலும் கைவிடுதல் ஆகாது. இவ்வாலயத்துக்கு நடைபெற்ற அவமானம்வேறு எந்த சைவ ஆலயத்திற்கு மட்டுமன்றி ஏனைய சமய வழிபாட்டிடங்களுக்கும் நடைபெற்ருல் அதையும் நாம் சகிக்க முடியாது என்பதனை மிக மன வருத்தத்துடனும் கண்டிபபாகவும்கூறிக்கொள்கிருேம்.'',

## ஜெனரேட்டர் அபகரிப்பு

(மட்டக்களப்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயுதங்களுடன் தொலைத்தொடர்பு நிலயத்தினுள் புகுந்த இனந்தெரியாத இளைஞர் குழுவொன்று அங்கிருந்த அதிசக்தி வாய்ந்த ஜெனரேட்டரை வான் ஒன்றில் அபகரித்து சென்றுள்ளது

இதேவேளை ஏற்கனவே இருமுறை கொள்ளையடிக்கப்பட்ட மீன்பிடி பயிற்சி நிலையத்தில் மூன்ருவது முறையாகவும் 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களை அபகரித்து சென்றுள்ளதாக தெரியவருகிறது. (ரா)

## எம். ஜி. ஆர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றியீட்டியுள்ள ஆந்திரா முதலமைச்சர் திரு. என் டீ. ராமராவுக்கும் கர்நாடக முதலமைச்சர் திரு. ஹெக்டேக்கும் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்தார். [ரா]

## யாழ்தேவி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை நடைபெறமாட்டாதென்றும் தெரிவிக்கப்பட்டது

கடந்த ஜனவரி மாதம் முருகண்டியில் யாழ். தேவி ரயில் குண்டுவெடிப்பினல் சேதமடைந்ததையடுத்து கிளிநொச்சி வரையிலான ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

சரக்கு ரயில் சேவையும் கிளிநொச்சி வரை நடைபெறவுள்ளது

## பசிக்கொடுமை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினுர். நெடுங்கேணியில் கூலிவேலை செய்யும் இறந்தவரின் தந்தை சிதம்பரி நாகமணி, தொழிலில்லாததினல் 3 மாதங்கள்வீட்டிற்குப் பணம் அனுப்பவில்லையென்றும், இதனுல் வீட்டில் கஷ்டம் நிலவிவந்ததாகவும், இம்மாதம் 4ம் திகத வீட்டில் சமைக்காததினுல் எல்லோரும் பட்டினி கிடந்ததாக விசாரணையில் கூறப்பட்டது

5ம் திகதி காலை தணிகாசலம் எழுந்து 'பசிக்கொடுமை தாங்கமுடியாது; பட்டினி கிடக்க முடியவில்லை. ஊரில் உழைப்பில்லை' என்று கண்ணீர் வடித்தபோது, 'அடையாள அட்டை கிடைத்தாலும், தொழிலுக்குப் போகலாம்' எனத் தாயார் ஆறுதல் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது அன்று அவர் பசிக் கொடுமையால் நச்சுத் திராவகம் அருந்தியதாகவும் கூறப்படடது

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

## தெல்லி, மாவைப் பகுதிகளில்

# பிரதான தொலைபேசி இணைப்புகள் சேதம்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பளை, மாவிட்டபுரம் பகுதிகளில் தொலைபேசி இணைப்புகள் பழுதடைந்து பல மாதங்களாகின்ற போதும் சீர் செய்யப்படாமையால் பொதுமக்கள் அவசர தொலைபேசி தொடர்புகளைப் பெற முடியாமல் பெரிதும் கஷ்டமுறுகிறுர்கள்.

தெல்லிப்பளைப் பகுதிக்கான தொலைபேசி இணைப்பு இனந்தெரியாதவர்கள் ''கேபிள்'' களை வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளதால் பழுதடைந்து விட்டது. தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரி, தபாற்கத்தோர், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ப. நோ. கூ. சங்கம், யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி உட்பட 11 தொலைபேசி இணைப்புகள் செயலற்றுக் கிடக்கின்றன. (கி)

## 1983 ஜூலையில் மரணமடைந்த

# ப. நோ. கூ. சங்க ஊழியர் குடும்பங்களுக்கு நிதியுதவி

{பண்டத்தரிப்பு}

கடந்த 1983-ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினுல் மரணமான மாதகலைச் சேர்ந்தவரும், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க ஊழியருமான திரு. தில்லையம்பலம் கந்தசாமி என்பவரின் குடும்பத்திற்கு 2000/- ரூபாவை வழங்குவதென்று பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கப் பணிப்பாளர் சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்கத்தின் 6-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர்திரு எஸ் பி ஜோசப் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 1983 ஜூலைக் கலவர காலத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினுல் உயிரிழந்த புலோலி ப நோ. கூ. சங்கத்தின் மூன்று ஊழியர்களினதும் குடும்பங்களுக்கு தலா 500 ரூபாவீதம் 1,500 ரூபாவை வழங்குவதும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் புதுவருட நிர்வாகிகள் தெரிவுநடைபெற்ற போது திரு. மு. வேலாயுத பிள்ளை தலைவராகவும், திரு. சி. நடராசா செயலாளராகவும், திரு. எம். சிவனேசன் பொருளாளராகவும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்

## நெல் மூடைகளை எடுத்துச்சென்றனர்

(மட்டக்களப்பு)

மண்டபத்தடி நெல் களஞ்சியத்தில் கடந்த புதன்கிழமை இரவு இளைஞர் கோஷ்டி ஒன்று காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 350 நெல் மூடைகளை லொறிகளில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து வீடியோ தியேட்டர் ஒன்று கொளுத்தப்பட்டதுடன், பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுவிசாரணைக்காககொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. [ரா]

## இலங்கை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தியா வந்தடைந்துள்ள அகதிகளின் மொத்த எண்ணிக்கை 14,962 எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மண்டபத்தில் இரண்டுகோடி ரூபா செலவில் மேலும் ஆயிரம் சிறு வீடுகள் கட்டுவதற்குத் தமிழ் நாடு அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளதாகவும், இந்த வீடுகளில் மொத்தமாக இரண்டாயிரம் குடும்பங்கள் தங்கக்கூடியதாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## குருநகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும், அதனை அவர்கள் ஏற்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

அங்கு சில பிரச்னைகள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனராம்.

இவர்களுக்கு நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் வீடுகள் வழங்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. [க]


## மரண அறிவித்தல்

### முத்துக்குமார் குமாரசாமி

அன்னர், அராலி வடக்கு இரத்னம்மாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டாக்டர் N. முத்துக்குமாரின் மகனும், புஸ்பம், கமலா (லெசோத்தோ), முத்துக்குமாரு ராஜன் (பிரான்ஸ்), செல்வம், நாராயணகுமார் (கனடா), புனிதம், திவி (கனடா), கணேஷ் (கனடா) இவர்களின் அன்புத் தந்தையும், W S. செல்வநாயகம், A S. சிவம் (லெசோத்தோ), சந்திரா, K. பத்மநாதன், ஜயந்தி (கனடா), T. அரியரட்ணம், T. சிவானந்தர் [கனடா] இவர்களின் அன்பு மாமனுரும், காலஞ்சென்ற மார்க்கண்டு, திருமதி பராசக்தி இராமலிங்கத்தின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் 10-3-85 ஞாயிற்றுக் கிழமை மாலை 3-00 மணிக்கு தபால் கந்தோர்ரேட் சாவகச்சேரி அன்னரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றுர், உறவினர், மற்றும் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

2164


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலங்கோவில் மேற்கு வீதி, 58ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126